# ஆகஸ்ட்– 10 – வெள்ளி

**புனித லோரன்ஸ்**

**"எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்" (யோவா 12:26)**

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 9 : 6 – 10

சகோதர சகோதரிகளே குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார். நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார். இதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும். மனவருத்தத்தோடோஇ கட்டாயத்தினாலோ கொடுக்கவேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்.கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்ப வல்லவர். எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்குத் தருவார் அனைத்து நற்செயல்களையும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்."ஒருவர் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கும்போது அவரது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்" என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா!விதைப்பவருக்கு விதையையும், உண்பதற்கு உணவையும் வழங்குபவர், விதைப்பதற்கு வேண்டிய விதைகளை வழங்கி அவை முளைத்து வளரச் செய்து அறச்செயல்களாகிய விளைச்சலை மிகுதியாகத் தருவார்.

**பதில்பாடல் :** மனம் இரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர்
நன்மை அடைவர்.

## நற்செய்தி : யோவான் 12 : 24 - 26

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம்வாழ்வைப் பொருட்டாகக்கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்.எனக்குக் தொண்டு சய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்" என்றார்.

**தியானம்:** கடவுளுக்கு பணிந்து வாழ்வது கிறிஸ்த்தவர்களாகிய நமது பணி. அதற்காக நாம் பலவற்றை இழக்க வேண்டும் என்பதனை இன்றைய வாசகங்கள் எமக்கு வெளிப்படுத்துகின்றன. ஒரு தாய் தன் குழந்தைக்காக தூக்கம் தொலைக்கின்றாள், பசி மறக்கின்றாள், தனது சொந்த விருப்புக்களை ஒதுக்கி வைக்கின்றாள். அப்படியானால்தான் குழந்தையை ஒழுங்காக வளர்க்க முடியும். ஒன்றை இழந்தால்தான் நாம் இன்னொன்றை அடைய முடியும். விதை தன்னை அழிப்பதால்தான் மரம் வளருகின்றது. அழியாமல் அப்படியே இருந்தால் மரம் வளரமுடியாது. இறை அரசை வளர்க்க, அதற்கு செல்லும் பாதையை காட்ட யேசு தம்மை அழித்தார். அவர் தொடர்ந்து வாழ்ந்திருந்தால் கிறிஸ்த்தவம் வளர்ந்திருக்க முடியாது. சீடர்கள் அவர் பின்னால் சென்று கொண்டிருந்திருப்பார்கள். அனால் யேசு மறைந்தவுடன் திருச்சபையின் வளர்ச்சி ஆரம்பமானது. தனது உயிரைக் கொடுத்ததன் மூலம் மூடப்பட்ட வாசல்களை யேசு திறந்து வைத்தார். இன்று நம் முன்னும் பல மூடப்பட்ட கதவுகள் நாம் வெளியே வர முடியாமல் தடுக்கின்றன, குடும்ப பாரம், சுய கௌரவம், வேதனைகள், நோய்கள், பிள்ளைகளின் வழிதவறிய வாழ்க்கைமுறை , போதை, குடிப்பழக்கம், பணத்திமேல் கொண்ட பற்று, அதிகப்படியான ஆசை எல்லாம் நமக்கு மூடப்பட்ட கதவுகளே. அவற்றை திறக்கும் வல்லமை இறைவனிடம் உண்டு. மூடப்பட்ட வாசல்கள் எல்லவற்றையும் திறக்கும்படி அவரை நோக்கி மன்றாடுவோம்.